**DEPARTMENT OF TAMIL**

**PART I - TAMIL**

**PROGRAMME OUTCOME (PO)**

| | |
|---|---|
| **PO1.** | **செயுள் :** முதல் பருவத்தில் செயுள் பகுதியில் புதுக்கவிதை இலக்கியமும் இரண்டாம் பருவத்தில் பக்தி / சிற்றிலக்கியமும் மூன்றாம் பருவத்தில் காப்பிய இலக்கியமும், நான்காம் பருவத்தில் சங்க இலக்கியமும் தமிழ்ப் பாடத்திட்டத்தில் அறிமுகம் செயப்பட்டுள்ளன. |
| **PO2.** | **வாழ்வியல் கல்வி (உரைநடை) :** நான்கு பருவத்திற்கும் வாழ்வியல் கல்வி (VBE) எனும் அடிப்படையில் உரைநடைப்பகுதி இடம்பெறுகிறது. முதல் பருவத்தில் சூழலியல் சார்ந்தும், இரண்டாம் பருவத்தில் நாட்டு வரலாறு அடிப்படையிலும், மூன்றாம் பருவத்தில் மொழிபெயர்ப்புத் திறன் ஒட்டியும், நான்காம் பருவத்தில் ஆட்சிப்பணித் தமிழ் மற்றும் தமிழ்க் கணினி அறிவு பெறும் முறையிலும் பாடத்திட்டம் அமைக்கப்பெற்றுள்ளது |
| **PO3.** | **இலக்கணமும் மொழித்திறனும் (படைப்பாக்கம்) :** நான்கு பருவத்திலும் இலக்கணப் பயிற்சி அறிமுக நிலையில் தரப்பட்டுள்ளது. பாடப்பகுதியில் இடம்பெறும் செயுள் தொடருக்கான இலக்கணக் குறிப்பை அறிதல், வல்லினம் மிகுமிடங்கள், மிகா இடங்கள், தொகை நிலைத் தொடர்கள், தொகா நிலைத் தொடர்கள், யாப்பிலக்கணம், அணியிலக்கணம், அகம், புறம் பற்றிய விளக்கங்கள், திணை, துறை பற்றிய விளக்கம் பாடப்பகுதியையொட்டி அளிக்கப்பட்டுள்ளன.<br>நான்கு பருவத்திலும் மாணாக்கர்களுக்குப் பயிற்சி ஏடு வழங்கப்பட்டு மொழித்திறன் மேம்பட பயிற்சி அளிக்கப்படுகிறது. முதல் பருவத்தில் மொழிபெயர்ப்பு (தமிழாக்கம் செதல்) அலுவலக, பொது நிலைப் பயன்பாடுகளுக்கும், இரண்டாம் பருவத்தில் விண்ணப்பங்கள் வரைதல் அலுவலக, பொது நிலைப் பயன்பாடுகளுக்கும், மூன்றாம் பருவத்தில் பொதுக் கட்டுரை வரைதலும், நான்காம் பருவத்தில் கவிதை, சிறுகதை உருவாக்கம் அடிப்படையிலும் வகுக்கப்பட்டுள்ளன |
| **PO4.** | **இலக்கியவரலாறு :** ஒவ்வொரு பருவத்திற்கும் செயுள் பகுதியையொட்டிய இலக்கிய வரலாறுகள் கொடுக்கப்பட்டுள்ளன. (நான்கு அல்லது ஐந்து தலைப்புகள்) |
| **PO5.** | **பேச்சுக்கலை, தமிழகக் கோயில்கலை, சிற்பக்கலையும் ஓவியக்கலையும், தன்முயற்சி படிப்பு**<br>மரபார்ந்த கலைகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் முதல் மற்றும் இரண்டாம் பருவத்தில் பேச்சுக் கலை பாடத்திட்ட அடிப்படையிலும் நேர் பயிற்சி அடிப்படையிலும் வழங்கப் பெறுகிறது. மூன்றாம் பருவத்தில் தமிழகக் கோயிற்கலை அறிமுகமும், நான்காம் பருவத்தில் சிற்பக்கலை மற்றும் ஓவியக்கலை அறிமுகமும் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.<br>தன்முயற்சிப் படிப்பு நான்கு பருவத்திலும் இடம் பெறுகின்றது. சிறுகதை, புதினம், நாடகம், உரைநடை எனும் அமைப்பில் வழங்கப்படுகிறது. |

# PART IV - ADVANCED TAMIL
## PROGRAMME OUTCOME (PO)

| | |
|---|---|
| **PO1.** | **செ யுள் :** மூன்றாம் பருவத்தில் செ யுள் பகுதியில் புதுக்கவிதை இலக்கியமும் பக்தியிலக்கியமும் நான்காம் பருவத்தில் காப்பிய இலக்கியமும் சங்க இலக்கியமும் தமிழ்ப் பாடத்திட்டத்தில் அறிமுகம் செ யப்பட்டுள்ளன. |
| **PO2.** | **இலக்கணமும் மொழித்திறனும் :** இரண்டு பருவத்திலும் வல்லினம் மிகுமிடங்கள், மிகா இடங்கள், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் ஆகிய இலக்கணப் பகுதிகள் அறிமுக நிலையில் தரப்பட்டுள்ளன. இரண்டு பருவத்திலும் மாணாக்கர்களுக்குப் பயிற்சி ஏடு வழங்கப்பட்டு மொழித்திறன் மேம்பட பயிற்சி அளிக்கப்படுகிறது. மூன்றாம் பருவத்தில் மொழிபெயர்ப்பு (அலுவலக, பொது நிலைப் பயன்பாடு) நன்காம் பருவத்தில் விண்ணப்பங்கள் வரைதல், கவிதை மற்றும் சிறுகதை உருவாக்கம் என்னும் அடிப்படையில் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. |
| **PO3.** | **இலக்கியவரலாறு :** ஒவ்வொரு பருவத்திற்கும் செ யுள் பகுதியையொட்டிய இலக்கிய வரலாறுகள் கொடுக்கப்பட்டுள்ளன. (நான்கு தலைப்புகள்) |
| **PO4.** | **பேச்சுக்கலை, கோயிற்கலை::** முதல் பருவத்தில் பேச்சுக் கலை பாடத்திட்ட அடிப்படையிலும் நேர் பயிற்சி அடிப்படையிலும் வழங்கப் பெறுகிறது. இரண்டாம் பருவத்தில் மரபார்ந்த கலைகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் தமிழகக் கோயிற்கலை அறிமுகமும், சிற்பக்கலை அறிமுகமும் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. |
| **PO5.** | **தன்முயற்சிப் படிப்பு:** தன்முயற்சிப் படிப்பு இரண்டு பருவத்திலும் இடம் பெறுகின்றது. சிறுகதைக் கொத்து, உரைநடை எனும் அமைப்பில் வழங்கப்படுகிறது. |

# PART IV - BASIC TAMIL
## PROGRAMME OUTCOME (PO)

| | |
|---|---|
| **PO1.** | எளிய கேட்டறிந்த பாடல்கள், கதைகள் கேட்டுப் புரிந்துகொள்ளுதல். மொழியின் அனைத்து உச்சரிப்புகளையும் தவறின்றி ஒலிக்கும் திறன். எளிய சந்தப் பாடல்களைக் கதைகளை உரத்தக் குரலில் படிக்கும் திறன். |
| **PO2.** | எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் எழுதிப் பழகுதல். எழுத்துகளின் ஒலி வடிவம், வரி வடிவம் ஆகியவற்றை ஆசிரியர் வழிகாட்டுதலுடன் அறிதல். எழுத்துக்களிலிருந்து சொற்கள் உருவாக்குதல். |
| **PO3.** | சிறிய தொடர்களைப் படித்து எழுதும் பயிற்சியளித்தல். சொற்களின் பகுதி, விகுதி, ஒருமை, பன்மை, காலம் இவற்றின் தன்மைகளைக் கண்டறியும் திறன். |
| **PO4.** | எளிய செயுள் வடிவங்களைப் படித்துப் புரிந்து கொள்ளுதல். கதைகளில் உள்ள அறக்கருத்துகளை உணர்ந்துகொள்ளதல். |
| **PO5.** | முழுமையான வாக்கியங்களில் விடையளிக்கும் திறனை வளர்த்தல். சொற்களைப் பயன்படுத்திக் கடிதங்களை எழுத வைத்தல். |